தினமலர் 19.07.2023

# ஆண் - பெண் போன்று 'திருநர்'களுக்கு தனிப்பிரிவு

கட்டுரையாளர், கோவை அவினாசிலிங்கம் பல்கலை உதவி பேராசிரியர். 'மங்கையானவன் பவுண்டேஷன்' எனும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் நிறுவனர்; யோகா படிப்பில் முதுகலை முனைவர் மற்றும் விளையாட்டு படிப்பில் எம்.பிளட்., பட்டம் பெற்றவர்.

இந்த கட்டுரையை வீடியோவில் காண இந்த 'க்யூஆர்' கோடை ஸ்கேன் செய்யவும்.



வி.ப்ரீத்தி

**ஆண்கள், பெண்கள் போலவே திருநர்களும் விளையாட்டு துறை உட்பட அனைத்து துறைகளிலும் ஈடுபட வேண்டும்; சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர்.**

பணம் படைத்தவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற பல வழிகள் உண்டு. ஆனால், பணம் இல்லாத ஏழை மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவும், தங்களை உயர்த்திக் கொள்ளவும் விளையாட்டு போன்ற ஒரு சில விஷயங்கள் மட்டுமே உள்ளன.

விளையாட்டில் திறமை உள்ள மாணவ, மாணவியர் பள்ளி பருவத்திலேயே தங்களின் திறமையை வளர்த்துக் கொண்டு மாநில, தேசிய, சர்வதேச அள்விலான போட்டிகளில் பங்கேற்கின்றனர். பலர் தங்கள் உயர்கல்வியை, விளையாட்டு முன்னுரிமை பிரிவில் பயில்கின்றனர். பல ஏழை எளிய மாணவர்கள் உயர் கல்வி பெற, விளையாட்டு திறமை ஒரு ஆயுதமாக இருந்து வருகிறது.

விளையாட்டு வீரராக இருக்கும் ஒருவருக்கு பள்ளி, கல்லூரி, பணி உள்ளிட்டவற்றில் 'ஸ்போர்ட்ஸ் கோட்டா'வில் இட ஒதுக்கீடு கிடைக்கிறது. ஆனால், பிறப்பால் ஆண் அல்லது பெண்ணாக பிறந்து, 'ஹார்மோன்' மாற்றத்தால், திருநங்கையாகவோ, திருநம்பியாகவோ மாற்றம் பெறும், திருநர் சமூகத்தினருக்கு விளையாட்டுத்துறையில் எந்த ஒரு சலுகைகளும் கிடைப்பதில்லை.

## சாதிக்க ஆசை

ஆர்வம், திறமை இருந்தும், அவர்களுக்கான கதவுகள் இன்னும் திறக்கப்படாமல் உள்ளன. இக்காலத்தில் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் பல்வேறு துறைகளில் சாதித்து வருகின்றனர்.

ஆண்கள், பெண்கள் போலவே, திருநர்களும் விளையாட்டு துறை உட்பட அனைத்து துறைகளிலும் ஈடுபட வேண்டும்; சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். ஆனால், நம் நாட்டில் அவர்களுக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதே, உண்மை.

தற்போது பலர் விளையாட்டிலும் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். மராத்தான் போட்டிகளில் பங்கேற்று ஓடுகின்றனர்; த்ரோபால் விளையாடுகின்றனர். இன்னும் பல்வேறு விளையாட்டுகளில் ஆர்வம் மற்றும் திறமை இருந்தும், எங்கு காட்டுவது என தெரியாமல் உள்ளனர். இவர்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க, சாதிக்க, பாலினம் ஒரு முட்டுக்கட்டையாகவே இருந்து வருகிறது.

விளையாட்டு துறை மற்றும் தனியார் சங்கங்கள் சார்பில் நடத்தப்படும் போட்டிகளில், ஆண், பெண் என இரு பிரிவுகள் உள்ளன. அந்தந்த பிரிவில், மாநில, தேசிய, சர்வதேச அளவில் வெற்றி பெறுவோருக்கு அரசு சார்பில், உதவித்தொகை, அரசு பணிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகின்றன. அதேநேரம், பல்வேறு திறமைகள் இருந்தும், திருநர்களுக்கு இதுபோன்ற வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

## தனிப்பிரிவு தேவை

பள்ளி, கல்லூரிகளில், விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யும்போது ஆண், பெண் என இரண்டு பிரிவுகள் இருப்பது போல், திருநர்களுக்கும் தனி பிரிவு ஏற்படுத்துவது அவசியம். ஒரு சில மாநிலங்களில் இதை பின்பற்றி வருகின்றனர்.

'ஹாரிசான்டல் ரிசர்வேஷன்' எனப்படும் இட ஒதுக்கீடு வழங்கினால், திருநர்களும் சமுதாயத்தில் நல்ல நிலைக்கு வர முடியும். விளையாட்டு துறையில் வெற்றி பெறுவோருக்கு அரசு சார்பில் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதுபோன்ற சலுகைகள், இடஒதுக்கீடு பெற திருநர்களுக்கு தனிப் பிரிவு கொண்டு வந்து, போட்டிகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

மேலும், 'தங்களை ஆண் அல்லது பெண்ணாக அடையாளப்படுத்தும் திருநர்களை, அந்தந்த பிரிவில் பங்கேற்க அனுமதி அளிக்க வேண்டும்' என, நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. எனினும் இதுவரை நடமுறைக்கு வரவில்லை. இவை நடைமுறைப்படுத்தப்பட்டால், பிற துறைகளை போல் விளையாட்டிலும், திருநர்களால் சாதிக்க முடியும்.

திருநர்களை ஆண், பெண் பிரிவில் பங்கேற்க அனுமதிக்கப்படாவிட்டாலும் அவர்களுக்கு தனிப்பிரிவு ஏற்படுத்த வேண்டும் என ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

## வாழ்க்கை மாறும்

கடந்த முறை, கோவையில் 'மங்கையானவன் பவுண்டேஷன்' நடத்திய மராத்தான் போட்டியில் பல்வேறு பகுதிகளில் இருந்து, 150க்கும் மேற்பட்ட திருநர்கள் பங்கேற்று தங்களின் ஆர்வத்தை காட்டினர். ஆனால், பள்ளிகல்வித்துறை, விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாநில அரசு சார்பில் நடத்தப்படும் போட்டிகளில் இவர்களுக்கு என தனிப்பிரிவு ஏற்படுத்த, யாரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

கடந்த 2022 டிச., மாதத்தில் 'பாக்சிங்' போட்டியில் திருநர் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு தனிப் பிரிவு கொண்டு வர நடவடிக்கை எடுக்கபோவதாக, 'உலக பாக்சிங் கவுன்சில்' அறிவித்திருந்தது. நியூசிலாந்து நாட்டை சேர்ந்த லாரல் ஹாப்பார்டு என்ற திருநங்கை '2020 சம்மர் ஒலிம்பிக்ஸ்' பளுதூக்கும் போட்டியில் பெண்கள் பிரிவில் போட்டியிட்டார்.

இவ்வாறு, திருநர்களுக்கு ஊக்கம் அளித்து, விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடு செய்தால், தமிழகத்தில் இருக்கும் பல திருநர்களின் வாழ்க்கை மாற்றம் பெறும்.